# வணிக வரி மற்றும் பதிவுத் துறை

# மானியக் கோரிக்கை எண் 11
# முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2015–2016

**எம். சி. சம்பத்**
வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்

(C)
தமிழ்நாடு அரசு
2015

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | துறையின் அமைப்பு | |
| | 2.1 தலைமையிடம் | 3–5 |
| | 2.2 பதிவு மண்டலங்கள் | 5–7 |
| | 2.3 வட்டார அலுவலகங்கள் | 7–8 |
| | 2.4 பதிவு மாவட்டங்கள் | 8 |
| | 2.5 தணிக்கை அலகுகள் | 8–9 |
| | 2.6 சார்பதிவாளர் அலுவலகங்கள் | 9 |
| | 2.7 மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித் துணை ஆட்சியர் (முத்திரை) | 10 |
| | 2.8 புலனாய்வுப் பிரிவு | 10–11 |
| | 2.9 பதிவுத் துறை பயிற்சி மையம் | 11 |
| 3 | துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | |
| | அ) முழுமையாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 12 |
| | ஆ) பகுதியாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 12–13 |
| 4 | ஈட்டப்பட்ட வருவாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் | 13 |
| | 4.1 இந்திய முத்திரைச் சட்டப் பரிவு 47A(1)ன் கீழ் மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) மற்றும் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் செயல்பாடு | 14–15 |
| | 4.2 சந்தை மதிப்பு வழிகாட்டி (Market Value Guidelines) | 15–16 |
| 5 | முத்திரைத் தீர்வையின் மீதான மிகுவரியினை உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றுதல் | 17 |
| 6 | துணைமைப் பணிகள் | |
| | 6.1 சங்கங்கள் | 17–18 |
| | 6.2 சீட்டுகள் | 18 |
| | 6.3 கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் | 19 |
| | 6.4 திருமணப் பதிவு | 19–20 |

| | | |
|---|---|---|
| 7 | 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் மற்றும் 1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் ஆகியவற்றில் செய்யப்பட்ட மாற்றங்கள் | |
| | 7.1 அதிகார ஆவணங்களுக்கான பதிவுக்கட்டணத்தில் வருவாய் கசிவினை தடுத்தல் | 20–21 |
| | 7.2 ஆவண ஒளிவருடல் கட்டண சீரமைப்பு | 21 |
| | 7.3 இந்திய முத்திரைச் சட்டம் கூறு 55–A யின் கீழ் வகைப்படுத்தக் கூடிய விடுதலை ஆவணங்களுக்கான பதிவுக்கட்டணத்திற்கு ரூ.4000/– உச்சவரம்பு நிர்ணயம் | 21–22 |
| | 7.4 பிழையான/பயனற்றுப்போன/பயன்படுத்தாத நீதிசாரா முத்திரைத் தாட்களுக்கு திருப்புத்தொகை அளிக்கும் அதிகாரம், மாவட்டப்பதிவாளருக்கு வழங்குதல் | 22 |
| | 7.5 அதிகார ஆவணங்கள் தாங்கியுள்ள முத்திரைத் தீர்வை குறித்து சான்றளிக்கும் அதிகாரத்தை சார்பதிவாளர்களுக்கு வழங்குதல் | 23 |
| | 7.6 இணைய வழி வில்லங்கச்சான்று விவரங்களை பெறுவதற்கு கட்டண விலக்கு மற்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் வழங்கப்படும் வில்லங்கச் சான்றுக்கான கட்டணச் சீரமைப்பு | 23–24 |
| 8 | பதிவுத் துறையில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு | |
| | 8.1 வலை சார்ந்த கணினிமயமாக்கல் | 24–25 |
| | 8.2 இணைய வழியான புகைப்படக்கருவிகள் (IP camera) | 25 |
| | 8.3 வங்கிகள் மூலம் பணம் செலுத்திடும் முறை | 25–26 |
| | 8.4 எவ்வித கட்டணமுமின்றி வில்லங்கச் சான்று விவரங்களை துறை இணையதளத்தில் பார்வையிடும் வசதி | 26–27 |
| | 8.5 இணையவழி முன்பதிவு முறை (e-visit) | 27 |
| | 8.6 மின்னணு பதிப்பு முறை (e-stamping) | 27–28 |
| | 8.7 வலை நிழலி மற்றும் மின்னணு ரேகை பதிவு முறை செயல்படுத்திடுதல் | 28 |
| 9 | துறையின் உள்கட்டமைப்பு மேம்பாடு | |

| | | |
|---|---|---|
| | 9.1 கட்டடங்கள் கட்டுதல் | 29 |
| | 9.2 தீயணைப்பு கருவிகள் | 29–30 |
| 10 | 2005ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் | 30–31 |

# வணிகவரி மற்றும் பதிவுத்துறை
# மானியக் கோரிக்கை எண் 11
# முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு
# கொள்கை விளக்கக் குறிப்பு – 2015–2016

## முன்னுரை

**குறள்**

*கருவியும் காலமும் செய்கையும் செய்யும்*
*அருவினையும் மாண்டது அமைச்சு.*

**உரை**

செயலுக்கு உரிய கருவியும் ஏற்ற காலமும் செய்யும் வகையும் செய்யப்படும் அரிய செயலும் சிறப்படையச் செய்ய வல்லது அமைச்சு.

மேற்காணும் திருக்குறளில் எடுத்துரைக்கப்பட்டது போல பதிவுத்துறை காலத்திற்கேற்றவாறு தனது செயல்பாடுகளை மேம்படுத்தி தகவல் தொழில் நுட்பத்தின் வழியாக மக்களுக்கு சிறந்த சேவை செய்து வருகிறது.

பண்டைய தமிழகத்தில் மன்னர்களால் கொடையாக அளிக்கப்பட்ட நில விவரங்கள் செப்பேடுகளில் செதுக்கப்பட்டன. சங்க காலப் பாண்டிய மன்னரான நெடுஞ்செழியன் அவர்களால் கொடை அளிக்கப்பட்ட விவரம் அடங்கிய வேள்விக்குடி செப்பேடு மற்றும் சின்னமனூர் செப்பேடுகள் கண்டெடுக்கப்பட்டு இவ்விவரம் அறியப்பட்டது. இந்த நடைமுறை பிற பேரரசுகளாலும் கடைபிடிக்கப்பட்டது.

பொது மக்களிடையே நடைபெறும் சொத்து பரிவர்த்தனைகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்த ஆங்கிலேய அரசு, அவற்றைப் பதிவு செய்வதற்காக உரிய சட்டங்களையும் விதிகளையும் இயற்றி அதனைச் செயல்படுத்துவதற்காக தனியாக ஒரு துறையாக பதிவுத் துறையை **1864**ஆம் ஆண்டு தோற்றுவித்தது. பரிவர்த்தனை ஆவணங்கள் பதிவு செய்யப்படுவதால் சொத்தின் உரிமையாளர்களுக்கு அவை ஆதாரமாக அமைகின்றன. சொத்து பரிவர்த்தனைகளைப் பதிவு செய்வதன் மூலம் சொத்துரிமை பாதுகாக்கப்படுவதுடன் சட்ட விரோதமான முறைகளில் சொத்துக்களை அபகரிப்பதிலிருந்தும் பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது. சொத்து தொடர்பான பரிமாற்றங்களைப் பதிவு செய்வது, திருமணங்களைப் பதிவு செய்வது, சங்கங்கள் மற்றும் சீட்டுக்களைப் பதிவு செய்வது என ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்வதால், பதிவுத் துறை கடந்த **150** ஆண்டுகளில் தனக்கென இன்றியமையாத ஒரு இடத்தைப் பிடித்துள்ளது. வணிகவரி மற்றும் மது விலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறைகளுக்கு அடுத்து மாநிலத்தில் அதிக வருவாயை ஈட்டித்தரும் துறையாக விளங்கும் பதிவுத் துறை, கடந்த **2014–15**ஆம் நிதியாண்டில் **25,73,931** ஆவணங்களைப் பதிவு செய்ததன் மூலம் ரூ. **8279.64** கோடி வருவாய் ஈட்டியுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி எந்தவொரு வரியோ அல்லது தீர்வையோ உரிய சட்டத்தின் வாயிலாக மட்டுமே வசூலிக்கப்பட இயலும். பதிவுத் துறையால் வசூலிக்கப்படும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ஆகியவற்றிற்கு முறையே **1899**ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் மற்றும் **1908**ஆம் ஆண்டு

பதிவுச் சட்டம் ஆகியவற்றின்படி வசூலிக்கப்படுகின்றது. மேலும், துறையால் வேறு சில சட்டங்களும், பகுதியாகவும், முழுமையாகவும், நிர்வகிக்கப்படுகின்றன. ஆவணங்களைப் பதிவு செய்து அதன் மூலம் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிப்பதுடன், பல்வேறு சட்டங்களின் கீழ் திருமணங்களும் துறையால் பதிவு செய்யப்படுகின்றது. இதுமட்டுமன்றி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளுக்கான பிறப்பு இறப்பு பதிவேடுகளையும் பதிவுத் துறை பாதுகாத்து வருகின்றது.

## 2. துறையின் அமைப்பு

### 2.1 தலைமையிடம்

1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டம், பதிவுத் துறை, பதிவுத் துறைத் தலைவரின் கீழ் செயல்பட வேண்டுமென வரையறுக்கின்றது. அதன்படி, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு பதிவுத் துறைத் தலைவர் இத்துறையின் தலைவராகச் செயல்படுகின்றார். 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழ் முதன்மை வருவாய்க் கட்டுப்பாட்டு அலுவலர், 1975ஆம் ஆண்டு தமிழ் நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் மற்றும் 1982ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் ஆகியவற்றின் கீழ் பதிவாளர் ஆகிய சட்டபூர்வமான கடமைகளையும் இவர் மேற்கொள்கிறார். இவ்வாறு பதிவுத் துறைத் தலைவர் துறையின் நிர்வாகத் தலைவராக இருப்பதுடன், துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்களின் அடிப்படையில் சட்டப்பூர்வமான பணிகளையும் செய்கிறார். பதிவுத் துறைத் தலைவர் தமது கடமையை ஆற்றுவதற்கு,

தலைமையிடத்தில் கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்கள் உதவி புரிகின்றனர்:–

(1) 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் மற்றும் 1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் ஆகியவை தொடர்பான இனங்களைக் கவனித்துக் கொள்வதற்காக கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரை மற்றும் பதிவு);

(2) வழிகாட்டி மதிப்புகளை நிர்ணயம் செய்வது, 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47A(5) மற்றும் 56(2) ஆகியவற்றின் கீழ் பெறப்படும் மேல்முறையீடு மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பான இனங்களைக் கவனித்துக் கொள்வதற்காக கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி);

(3) துறையின் உள்கட்டமைப்பு மற்றும் தணிக்கை தொடர்பான இனங்களைக் கவனித்துக் கொள்வதற்காக கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு);

(4) சீட்டுகள் மற்றும் சங்கங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான சேவைகள் தொடர்பான இனங்களைக் கவனித்துக் கொள்வதற்காக கூடுதல் சீட்டுப் பதிவாளர் (கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்).

மேற்கண்ட அலுவலர்களைத் தவிர, துறையின் நிர்வாகத்தினைக் கவனிக்க ஒரு நேர்முக உதவியாளர் (பொது) (துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்), தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, துறையை கணினிமயமாக்குவதைக் கவனிக்க ஒரு உதவி பதிவுத்

துறைத் தலைவர் (கணினிமயமாக்கல்), துறையின் செயல்பாடுகள் குறித்து பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை விசாரிக்க ஒரு உதவி பதிவுத் துறைத் தலைவர் (விழிப்புப்பணி), வழிகாட்டி மதிப்புகளைத் தயாரிப்பதற்கு உதவியாக ஒரு மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி), சீட்டு மற்றும் சங்கங்கள் தொடர்பான பணிகளுக்கு உதவியாக ஒரு நேர்முக உதவியாளர் (சீட்டு), தணிக்கை தொடர்பான பணிகளில் உதவியாக ஒரு மாவட்டப் பதிவாளர் (ஆய்வு), கணினிமயமாக்கல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு உதவியாக ஒரு மாவட்டப் பதிவாளர் (கணினிமயமாக்கல்), வருவாய் வசூலிப்புச் சட்டத்தில் நிலுவையாக உள்ள இனங்களைக் கண்காணிப்பதற்காக ஒரு மாவட்டப் பதிவாளர் (வருவாய்) ஆகியோர் உள்ளனர். வரவு செலவு கணக்கைத் தயாரித்தல் மற்றும் துறையின் கணக்குகளைப் பராமரித்தல் ஆகிய பணிகளுக்காக கருவூலக் கணக்குத் துறையிலிருந்து பகராண்மையில் ஒரு கணக்கு அலுவலரும் உள்ளார்.

பதிவுத்துறையால் அளிக்கப்படும் சேவைகளின் தன்மையால், இத்துறை, பொது மக்களுடன் அதிகத் தொடர்புடைய துறையாக விளங்குகின்றது. பொது மக்களின் வசதிக்காகவும் மற்றும் எளிதாக அணுகுவதற்காகவும், அதிக அளவில் கள அலுவலகங்கள் பல்வேறு மண்டலங்களாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

## 2.2 பதிவு மண்டலங்கள்

மொத்த மாநிலமும் பல பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, இந்தப் பதிவு மாவட்டங்கள், பதிவு மண்டல

வாரியாக ஒருங்கிணைக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு துணைப் பதிவுத் துறைத் தலைவரின் கீழ் செயல்படுகின்றது. மண்டலத்தின் ஒட்டு மொத்த நிர்வாகம் மற்றும் வருவாய் வசூலைக் கண்காணிப்பது ஆகியவை துணைப் பதிவுத் துறைத் தலைவரின் பணிகளாகும். தங்களின் கட்டுப்பாட்டில் உள்ள அலுவலகங்களில் இவர்கள் திடீர் ஆய்வும் மேற்கொள்கின்றனர். மாநிலத்தில் மொத்தம் 9 பதிவு மண்டலங்கள் உள்ளன. பதிவு மண்டலங்கள் மற்றும் அவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள பதிவு மாவட்டங்கள் ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு:—

| **வ.எண்** | **பதிவு மண்டலம்** | **மண்டலத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பதிவு மாவட்டங்கள்** |
|---|---|---|
| 1. | சென்னை | வட சென்னை, தென் சென்னை, மத்திய சென்னை, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் |
| 2. | வேலூர் | வேலூர், செய்யாறு, அரக்கோணம் மற்றும் திருவண்ணாமலை |
| 3. | கடலூர் | கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சிதம்பரம், திண்டிவனம் மற்றும் விருத்தாசலம் |
| 4. | சேலம் | சேலம்(கிழக்கு), சேலம்(மேற்கு), கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் தர்மபுரி |

| | | |
|---|---|---|
| 5. | திருச்சிராப்பள்ளி | திருச்சி, அரியலூர், கரூர் மற்றும் புதுக்கோட்டை |
| 6. | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பட்டுக்கோட்டை மற்றும் கும்பகோணம் |
| 7. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், உதகமண்டலம், ஈரோடு மற்றும் கோபிசெட்டிபாளையம் |
| 8. | மதுரை | மதுரை(வடக்கு), மதுரை (தெற்கு), திண்டுக்கல், பழனி, பெரியகுளம், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மற்றும் காரைக்குடி |
| 9. | திருநெல்வேலி | திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, சேரன்மகாதேவி மற்றும் மார்த்தாண்டம் |

## 2.3 வட்டார அலுவலகங்கள்

துணைப் பதிவுத் துறைத் தலைவர் தமது பணிகளைச் செய்வதற்கு உதவியாக சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு இடங்களில் உதவி பதிவுத் துறைத்

தலைவர்களின் கீழ் செயல்படும் வட்டார அலுவலகங்கள் உள்ளன.

## 2.4 பதிவு மாவட்டங்கள்

1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் பதிவு மாவட்டங்களை உருவாக்க வழி வகுக்கின்றது. அதன்படி, நமது மாநிலத்தில் 50 பதிவு மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் அதிகப் பணிச்சுமை உள்ள 13 மாவட்டங்கள் உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலையிலுள்ள அலுவலர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. எஞ்சியுள்ள 37 பதிவு மாவட்டங்கள் மாவட்டப் பதிவாளர்களின் தலைமையில் செயல்படுகின்றன. மாவட்டப் பதிவாளர்கள் தங்களது ஆட்சி எல்லைக்குள், சங்கங்களின் பதிவாளர், துணைச் சீட்டுப் பதிவாளர், திருமணப் பதிவாளர் மற்றும் கூட்டுப் பங்காண்மை நிறுவனங்களின் பதிவாளர் ஆகிய சட்டபூர்வமான அலுவலர்களாக செயல்படுகின்றனர். முத்திரைத் தாள் விற்பனையாளர்களுக்கு உரிமமும் வழங்குகின்றனர்.

## 2.5 தணிக்கை அலகுகள்

பதிவுத் துறையால் ஈட்டப்படும் வருவாயில் பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் முக்கிய பங்கு வகிப்பதால், அவை முறையாக வசூலிக்கப்படுவதை உறுதி செய்வது இன்றியமையாததாகும். இதற்காக, பதிவு செய்யப்படும் அனைத்து ஆவணங்களையும் தணிக்கை செய்யும் பொருட்டு, 45 தணிக்கை அலகுகள் ஒவ்வொன்றும் ஒரு

மாவட்டப் பதிவாளரின் கீழ் துறையில் இயங்கி வருகின்றன.

## 2.6 சார்பதிவாளர் அலுவலகங்கள்

**1908**ஆம் ஆண்டு பதிவுச் சட்டம், சார்பதிவாளர் அலுவலகங்களை உருவாக்கவும் வழி வகுக்கின்றது. அதன்படி, நமது மாநிலத்தில் **578** சார்பதிவாளர் அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நமது மாநிலத்தை விட அதிக பரப்பளவு மற்றும் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் பொது மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு நமது மாநிலத்தில் தான் அதிக அளவில் சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. ஆவணங்களின் பதிவு, பல்வேறு திருமணச் சட்டங்களின் கீழ் திருமணங்கள் பதிவு ஆகியவை சார்பதிவாளர்களின் முக்கியமான பணிகளாகும். **1982**ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் உதவி பதிவாளர்களாகவும் செயல்படுகின்றனர். சார்பதிவாளர் அலுவலகங்களில் பாதுகாக்கப்படும் பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளுக்கான பிறப்பு இறப்பு பதிவேடுகளிலிருந்து நகல்களும் தேவைப்படும் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.

## 2.7 மாவட்ட வருவாய் அலுவலர்கள் (முத்திரை) / தனித் துணை ஆட்சியர்கள் (முத்திரை)

**1899**ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்படி, விற்பனை, பரிமாற்றம், தானம், ஏற்பாடு **(Settlement)** போன்ற ஆவணங்களுக்கு அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள

சொத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். சொத்தின் சந்தை மதிப்பு சரியாகக் குறிப்பிடப்படவில்லையென பதிவு அலுவலர் கருதினால், ஆவணத்தைப் பதிவு செய்த பின், சந்தை மதிப்பு மற்றும் செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை ஆகியவற்றை நிர்ணயிக்கும் பொருட்டு 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47A(1)ன்படி, ஆவணத்தை தனித் துணை ஆட்சியர்கள் (முத்திரை) அவர்களுக்கு அனுப்ப வேண்டும். இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர்களும் (முத்திரை) மற்றும் ஒன்பது தனித் துணை ஆட்சியர்களும் (முத்திரை) பிரிவு 47A –ன் பொருட்டு ஆட்சியர்களாக அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். இந்த இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர்கள் சென்னை மற்றும் கோயம்புத்தூரிலும், ஒன்பது தனித் துணை ஆட்சியர்கள் திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களிலும் உள்ளனர்.

## 2.8 புலனாய்வுப் பிரிவு

சில நேர்வுகளில், அசையாச் சொத்துக்களில் அமைந்துள்ள கட்டடம் தொடர்பான விவரத்தினை மறைத்து ஆவணம் எழுதுகின்றனர். அந்த ஆவணத்திலுள்ள கட்டுமானப் பகுதிக்கான மதிப்பிற்கும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிக்க வேண்டுமென்பதால், கட்டடம் தொடர்பான விவரங்களை மறைப்பதைத் தடுக்க, துறையில் புலனாய்வுப் பிரிவு ஒன்று செயல்படுகின்றது. இப்பிரிவு, கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு) அவர்களை தலைவராகவும்,

சரியான மதிப்பீடு செய்யும் பொருட்டு உதவி செயற்பொறியாளர்களை உள்ளடக்கியும் உள்ளது.

## 2.9 பதிவுத் துறை பயிற்சி மையம்

பதிவுத் துறையில் அதிக அளவில் சட்டங்கள் நிர்வகிக்கப்படுவதால், அவற்றின் பல்வேறு வழிமுறைகளையும் மற்றும் தொடர்புடைய இதர வழிமுறைகளையும் துறையின் அலுவலர்களும் பணியாளர்களும் நன்கு அறிந்து செயல்பட வேண்டியது அவசியமாகும். சில நேரங்களில், இந்த சட்டங்களுக்குப் பல்வேறு திருத்தங்கள் செய்யப்படுகின்றன. மேலும், துறையின் அன்றாட செயல்பாட்டில் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு பெருமளவில் உள்ளது. எனவே, துறையின் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் உரிய பயிற்சி வழங்குதல் இன்றியமையாததாகும். இதன் பொருட்டு, 1996ஆம் ஆண்டு முதல் சென்னையில் பதிவுத் துறைப் பயிற்சி மையம் செயல்பட்டு வருகின்றது. துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையிலுள்ள அலுவலரின் தலைமையில் இம்மையம் செயல்பட்டு வருகின்றது. பயிற்சிக்காக அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பணியாளர்கள் வருவதால் அவர்களின் வசதிக்காக தங்கும் விடுதி அமைக்கப்பட்டதுடன் பயிற்சி மையத்தை நவீனப்படுத்திடவும் பயிற்சி நடைமுறைகளை மேம்படுத்திடவும் கூடுதலாக ஆண்டுதோறும் ரூ.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3. துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

பதிவுத் துறை கீழ்க்காணும் சட்டங்களை நிர்வகிக்கின்றது:—

### அ) முழுமையாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

(1) 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)
(2) 1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 16/1908)
(3) 1975ஆம் ஆண்டு தமிழ் நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 27/1975)
(4) 1982ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982)

### ஆ) பகுதியாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

(1 ) 1872ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 15/1872)
(2) 1886ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு மற்றும் திருமணங்கள் சட்டம் (மத்திய சட்டம் 6/1886)
(3) 1932ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் (மத்திய சட்டம் 2/1932)
(4) 1932ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம் (மத்திய சட்டம் 9/1932)
(5) 1954ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 43/1954)
(6) 1955ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 25/1955)

(7) 1961ஆம் ஆண்டு வரதட்சணைத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 28/1961)

(8) 1969ஆம் ஆண்டு பிறப்பு மற்றும் இறப்புச் சட்டம் (மத்திய சட்டம் 18/1969)

(9) 2009ஆம் ஆண்டு தமிழ் நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 21/2009)

## 4. ஈட்டப்பட்ட வருவாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள்

பல்வேறு வகையான ஆவணங்களைப் பதிவு செய்யும் பொழுது அவற்றின் மீது முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ஆகியவற்றை வசூலிப்பது பதிவுத் துறையால் ஈட்டப்படும் வருவாயில் முக்கியமானதாகும். இது தவிர, வில்லங்கச் சான்றுகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் ஆகியவற்றை வழங்கும் போதும் மற்றும் சீட்டுகள், சங்கங்கள் மற்றும் திருமணங்களைப் பதிவு செய்யும் போதும் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.

கடந்த 5 ஆண்டுகளில் ஈட்டப்பட்ட வருவாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு:-

| வருடம் | வருவாய் (கோடியில்) | ஆவணங்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 2010–11 | 5020.50 | 3280503 |
| 2011–12 | 6619.98 | 3518435 |
| 2012–13 | 7455.41 | 2690351 |
| 2013–14 | 8055.74 | 2653291 |
| 2014–15 | 8279.64 | 2573931 |

## 4.1 இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47Aன் கீழ் மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) மற்றும் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் செயல்பாடு

கிரையம், பரிமாற்றம், தானம் (Gift) போன்ற ஆவணங்களுக்கு அவற்றிலுள்ள சொத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். அத்தகைய ஆவணத்தில் கடைபிடிக்கப்பட்ட மதிப்பு சந்தை மதிப்பினை பிரதிபலிக்கவில்லை என பதிவு அலுவலர் கருதினால், **1899**ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு **47A(1)**ன் படி, அத்தகைய ஆவணத்தைப் பதிவு செய்த பின் சொத்தின் சரியான சந்தை மதிப்பு மற்றும் செலுத்தத்தக்க முத்திரைத் தீர்வையை நிர்ணயிக்க அந்த ஆவணத்தை சம்மந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர்(முத்திரை) / தனித்துணை ஆட்சியருக்கு (முத்திரை) அவர் அனுப்ப வேண்டும். இவ்வலுவலர்கள் களப் பணி மேற்கொண்டு சொத்தின் சந்தை மதிப்பினை நிர்ணயிக்கின்றனர். முத்திரைத் தீர்வை ஏதேனும் ஆவணதாரரால் குறைவாக செலுத்தப்பட்டிருந்தால், அதற்கான தொகையை மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) வசூலிக்கின்றனர். நிர்ணயிக்கப்படும் குறைவு முத்திரைத் தீர்வையை ஆவணதாரர் இரண்டு மாதங்களுக்குள் செலுத்தவில்லையென்றால் அதனை வசூலிக்க வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் இறுதியாணை மீது ஆட்சேபணை இருப்பின், ஆவணதாரர்கள் பதிவுத்துறைத்தலைவரிடம் **1899**ஆம்

ஆண்டு இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A(5)ன் கீழ் மேல்முறையீடு செய்யலாம். பதிவுத் துறைத் தலைவரின் ஆணையில் ஆட்சேபணை ஏதுமிருப்பின், இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A(10)ன் கீழ் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம். மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோர் பிறப்பித்த ஆணையினை பதிவுத்துறைத்தலைவர், இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A(6)ன் கீழ் தன்னிச்சையாகவும் சீராய்வு செய்யலாம். **2014–15** ஆம் ஆண்டில் இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A–ன் கீழ் செய்யப்பட்ட வசூல் விவரம் பின்வருமாறு :–

| | |
|---|---|
| மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை)க்கு **2014–15**ல் அனுப்பப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | **18516** |
| இறுதியாணை பிறப்பிக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | **15477** |
| குறைவு முத்திரைத் தீர்வை வசூலிக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | **13560** |
| மொத்தம் வசூலிக்கப்பட்ட தொகை | ரூ.**86.15** கோடி |

## 4.2 சந்தை மதிப்பு வழிகாட்டி (Market Value Guidelines)

பதிவு அலுவலர்கள் சொத்துக்களின் சந்தை மதிப்பு குறித்து அறிந்திட ஏதுவாக சந்தை மதிப்பு வழிகாட்டி தயாரிக்கப்பட்டு அவர்களுக்கு

வழங்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள சந்தை மதிப்பு வழிகாட்டியானது 1.4.2012 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

3.97 கோடி சர்வே எண்களுக்கும், 1.84 இலட்சம் தெருக்களுக்குமான சந்தை வழிகாட்டி மதிப்புகளை பதிவுத்துறை இணையதள முகவரி www.tnreginet.net யில் அறிந்து கொள்ளலாம்.

சந்தை மதிப்பு வழிகாட்டி நிர்ணயிப்பதற்காக, பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் மதிப்பீட்டுக் குழுவும், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைமையாகக் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் துணை மதிப்பீட்டுக் குழுக்களும் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சந்தை மதிப்பு வழிகாட்டியில் உள்ள முரண்பாடுகள் மதிப்பீட்டுக் குழு மற்றும் துணை மதிப்பீட்டுக் குழுவால் களையப்படுகின்றன. பொதுமக்களின் நலன் கருதி முரண்பாடுகளைக் களைவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு உள்ளாட்சித்துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்களுடன் கள ஆய்வுகள் செய்யப்பட்டு, உண்மையில் முரண்பாடுகள் இருப்பின் அவை அவ்வப்போது களையப்பட்டு வருகின்றன.

மதிப்பீட்டுக் குழுவின் தலைவரான பதிவுத் துறைத் தலைவராலும், துணை மதிப்பீட்டுக் குழுவின் தலைவரான மாவட்ட ஆட்சித் தலைவராலும் சந்தை மதிப்பு வழிகாட்டியை சீர் செய்வதில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 5. முத்திரைத் தீர்வையின் மீதான மிகுவரியினை உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றுதல்

கிரையம், தானம், பரிமாற்றம், அனுபவ உரிமையுடன் கூடிய அடமானம் மற்றும் காலவரையறை குறிப்பிடப்படாத குத்தகை போன்ற ஆவணங்களைப் பதிவு செய்யும் போது பதிவுத் துறையால் வசூலிக்கப்படும் வருவாயில், கணிசமாக உள்ள முத்திரைத் தீர்வையின் மீதான மிகுவரி, பல்வேறு உள்ளாட்சி மன்றங்களுக்கான சட்டங்களின் கீழ் (மாவட்ட நகராட்சிகள் சட்டம், தமிழ் நாடு பஞ்சாயத்து சட்டம் மற்றும் பல்வேறு மாநகராட்சிகள் சட்டங்கள்) சம்மந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்படுகின்றன. மிகுவரியாக வசூலிக்கப்படும் தொகையில், வசூலிப்புக் கட்டணமாக பதிவுத் துறையால் 3% இருத்திக் கொள்ளப்பட்டு, எஞ்சிய 97% சம்மந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்படுகின்றன. 2014–15ஆம் ஆண்டில், ரூ.1557.65 கோடி மிகுவரியாக வசூலிக்கப்பட்டு, அதில் ரூ.46.82 கோடி துறையால் வசூலிப்புக் கட்டணமாக இருத்திக் கொள்ளப்பட்டு, ரூ.1510.83 கோடி உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

## 6. துணைமைப் பணிகள்

### 6.1 சங்கங்கள்

மாநிலத்தில் இலக்கியம், அறிவியல், சமயம், அறக்கட்டளை மற்றும் இதர வகையிலான சங்கங்களைப் பதிவு செய்வதற்கு 1975ஆம் ஆண்டு தமிழ் நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் வழிவகை செய்கின்றது.

இச்சட்டத்தின்படி, சங்கங்கள் அவை செயல்படும் இடத்திலுள்ள மாவட்டப் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட வேண்டும். பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் தங்களின் ஆண்டுக் கணக்குகளை மாவட்டப் பதிவாளரிடம் கோர்வை செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில், அச்சங்கத்தின் பதிவு நீக்கப்படும். தற்போது, **31.3.2015** அன்றுள்ளவாறு, மாநிலம் முழுவதும் 1,58,557 பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

## 6.2. சீட்டுகள்

மாநிலத்திலுள்ள சீட்டு நிறுவனங்கள் மற்றும் சீட்டுக் குழுக்களின் செயல்பாடுகள், **1982**ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்படி (மத்திய சட்டம் **40/1982**) நிர்வகிக்கப்படுகின்றன. இச்சட்டத்தின்படி, பதிவுத் துறைத் தலைவர், சீட்டுகளின் பதிவாளர் ஆவார். சீட்டுகள் மற்றும் சீட்டுக் குழுக்கள் தொடர்பாக எழும் வழக்குகளை சென்னை (வடக்கு மற்றும் தெற்கு), மத்திய சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள மூன்று சீட்டு நடுவர்கள் விசாரிக்கின்றனர். எஞ்சிய இடங்களில் நிர்வாக மாவட்டப்பதிவாளர்கள் சீட்டு நடுவர்களுக்கான பணிகளைச் செய்கிறார்கள். சீட்டு நடுவரின் ஆணையை எதிர்த்து மேல்முறையீடு அரசிடம் செய்யப்பட வேண்டும். சீட்டுகள் மற்றும் சங்கங்கள் தொடர்பான பணிகளைக் கவனிப்பதற்காக மாநிலம் முழுவதும் **47** சார்பதிவாளர்கள் உள்ளனர். **31.3.2015** அன்றுள்ளவாறு, தமிழ் நாட்டில், 58,885 சீட்டுக் குழுக்களை நடத்தும் **2336** சீட்டு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

## 6.3. கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள்

**1932**ஆம் ஆண்டு கூட்டுப் பங்காண்மைச் சட்டத்தின்படி, பதிவாளர்களாக துறையின் நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் உள்ளனர். சட்டபூர்வ உரிமையைப் பெற வேண்டுமென்றால், கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் மற்றும் நிறுவனத்தின் அமைப்பில் ஏதேனும் மாற்றம் செய்தால் அதனையும் இச்சட்டத்தின் கீழ் கோர்வை செய்ய வேண்டும். **31.3.2015** அன்றுள்ளவாறு, தமிழ் நாட்டில் **5,80,509** பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் உள்ளன.

## 6.4 திருமணப் பதிவு

**2009**ஆம் ஆண்டு தமிழ் நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் அமல்படுத்தப்பட்ட பின்னர், மணமக்கள் எந்த சமயத்தைச் சார்ந்தவராக இருப்பினும், மாநிலத்தில் நடைபெறும் அனைத்துத் திருமணங்களையும் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனால், திருமணப் பதிவு பிரபலமடைந்துள்ளது. **2014–15**ஆம் ஆண்டில் **1,87,816** திருமணங்கள் இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதே போல,**2014–15**ஆம் ஆண்டில், **1955**ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டத்தின் கீழ் **1,64,810** திருமணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதே காலகட்டத்தில், **1954**ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் **19,475** திருமணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றுக்கான பதிவுக் கட்டணமாக ரூ.**4,66,58,121/–**வசூலிக்கப்பட்டுள்ளது. இந்திய கிறித்துவ திருமணச் சட்டம் **1872**ன் கீழ் **2014**ஆம் ஆண்டில் **5713**

விண்ணப்பங்கள் வரப்பெற்று திருமணப் பதிவுகளின் சான்றிட்ட நகல்கள் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு கட்டணமாக ரூ.2,28,520/– வசூலிக்கப்பட்டுள்ளது.

## 7. 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் மற்றும் 1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் ஆகியவற்றில் செய்யப்பட்ட மாற்றங்கள்

### 7.1 அதிகார ஆவணங்களுக்கான பதிவுக்கட்டணத்தில் வருவாய் கசிவினை தடுத்தல்

அசையாச் சொத்து கிரையம் தொடர்பான அதிகார ஆவணங்கள், குடும்ப உறுப்பினருக்கு எழுதிக்கொடுக்கும்போது ரூ.1000/– பதிவுக்கட்டணம் விதிக்கவும், இதர நபர்களுக்கு எழுதிக்கொடுக்கப்படும் போது ரூ.10,000/– பதிவுக்கட்டணம் விதிக்கவும், பதிவுக் கட்டண அட்டவணை வகை செய்கிறது. அசையாச் சொத்து கிரையம் தொடர்பான அதிகார ஆவணங்களில், மிக குறைவான கைமாற்றுத் தொகையினைக் குறிப்பிடுவதன் மூலம், கைமாற்றுத்தொகைக்கு ஒரு சதவீதம் மட்டும் பதிவுக் கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளும் போக்கு முன்பு இருந்து வந்தது. இத்தகைய போக்கு அரசின் வருவாயில் கசிவினை ஏற்படுத்துவதால், தனித்தனி சொத்தின் உரிமையாளர்கள் எழுதிக்கொடுக்கும் அதிகார ஆவணங்களுக்கு தனித்தனி பதிவுக்கட்டணம் விதிக்கப்படும் வகையிலும், கைமாற்றுத் தொகைக்காக எழுதப்படும் அதிகார ஆவணங்களுக்கு ஒரு சதவீதம் பதிவு கட்டணம் அல்லது இதர அதிகார ஆவணங்களுக்கான பதிவுக்கட்டணம் இதில் எது அதிகமோ அதனை

விதிக்கும் வகையிலும் பதிவுக் கட்டண அட்டவணைக்கு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இத்திருத்தம், 02.06.2014 முதல் அமலுக்கு வந்துள்ளது.

### 7.2 ஆவண ஒளிவருடல் கட்டண சீரமைப்பு

மின்னணு சாதனங்கள் மூலம் ஆவண நகல் ஒளிவருடல் செய்வதற்கு கூடுதல் கட்டணம் ரூ.100/– வசூலிக்க பதிவுக்கட்டண அட்டவணை கூறு 3(3) வகை செய்கிறது. ஆவணங்களை ஒளிவருடல் செய்து பாதுகாப்பதற்கு ஏற்படும் செலவினங்களுக்கு நிகராகும் வகையில், 10 பக்கங்கள் வரை ரூ.100/– ஒளிவருடல் கட்டணமும், அதற்கு மேற்படும் ஒவ்வொரு பக்கத்திற்கும் ரூ.15/– ஒளிவருடல் கட்டணமும் விதிக்கும் விதமாக பதிவுக் கட்டண அட்டவணை சீரமைக்கப்பட்டுள்ளது. இது 02.06.2014 முதல் அமலுக்கு வந்துள்ளது.

### 7.3 இந்திய முத்திரைச் சட்டம் கூறு 55A-இன் கீழ் வகைப்படுத்தக் கூடிய விடுதலை ஆவணங்களுக்கான பதிவுக்கட்டணத்திற்கு ரூ.4000/– உச்சவரம்பு நிர்ணயம்

இந்திய முத்திரைச் சட்டம் கூறு 55A-இன் கீழ், குடிவாழ் உரிமை, அடமான உரிமை ஆகியவற்றை விடுதலை செய்வது தொடர்பான ஆவணங்களும், இந்திய முத்திரைச் சட்டத்தின் 55ஆம் கூறிலுள்ள இதர கூறுகளுக்கு உட்படாத விடுதலை ஆவணங்களும் வகைப்படுத்தப்படுகிறது. இத்தகு ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வைக்கு ரூ.25,000/– அதிகபட்ச உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும் பதிவுக்கட்டணத்தை பொறுத்தமட்டில் இந்திய முத்திரைத் சட்டம் கூறு 55A-இன் கீழ் வகைப்படுத்தக் கூடிய ஆவணங்களில்

குடும்ப உறுப்பினர் இடையிலான ஆவணங்களுக்கு மட்டுமே, ரூ.4000/– உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்திய முத்திரைச் சட்டம் கூறு 55A-இன் கீழ் வகைப்படுத்தப்படக்கூடிய இதர ஆவணங்களுக்கு இந்த உச்சவரம்பு பொருந்தாத நிலை இருந்து வந்தது. இதனால், அடமான உரிமையைப் பகுதியாக விட்டுக் கொடுத்து எழுதிக் கொடுக்கப்படும் ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வையை விட கூடுதலாக பல மடங்கு பதிவுக் கட்டணம் விதிக்கும் நிலை இருந்து வந்தது. இந்த முரண்பாட்டினை களைந்திட ரூ.4000/– என்ற பதிவுக்கட்டண உச்ச வரம்பானது இந்திய முத்திரைச் சட்டம் கூறு 55A-இன் கீழ் வகைப்படுத்தக் கூடிய அனைத்து விடுதலை ஆவணங்களுக்கும் பொருந்திடும் வகையில், பதிவுக்கட்டண அட்டவணை திருத்தியமைக்கப்பட்டது. இத்திருத்தம் 16.10.2014 முதல் அமலுக்கு வந்துள்ளது.

## 7.4 பிழையான/பயனற்றுப்போன/பயன்படுத்தாத நீதிசாரா முத்திரைத் தாட்களுக்கு திருப்புத்தொகை அளிக்கும் அதிகாரம் மாவட்டப்பதிவாளருக்கு வழங்குதல்

இந்திய முத்திரை சட்டம் 1899 பிரிவு 49, 52, 53 மற்றும் 54ன் கீழ் பிழையான, பயனற்ற, பயன்படுத்தாத முத்திரைத்தாட்களுக்கு திருப்புத்தொகை வழங்கும் அதிகாரம், துணைப் பதிவுத் துறைத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. திருப்புத்தொகை நடைமுறையினை விரைவுபடுத்தி பொது மக்களுக்குப் பயன்தரும் வகையில், திருப்புத்தொகை வழங்கும் அதிகாரத்தை, மாவட்டப்பதிவாளர்களுக்கு வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. இது 16.10.2014 முதல் அமலுக்கு வந்துள்ளது.

**7.5 அதிகார ஆவணங்கள் தாங்கியுள்ள முத்திரைத் தீர்வை குறித்து சான்றளிக்கும் அதிகாரத்தை சார்பதிவாளர்களுக்கு வழங்குதல்**

ஆவணங்கள் தாங்கியுள்ள முத்திரைத் தீர்வை குறித்து **1899**ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு **31**-இன் கீழ் சான்றளிக்கும் அதிகாரம் மாவட்டப்பதிவாளர்களால் செயல்படுத்தப்பட்டு வந்தது. இதன்படி வெளிநாடுகளில் எழுதிக் கொடுக்கப்படும் அதிகார ஆவணங்களுக்கு தீர்வு பெற பொது மக்கள் மாவட்டப் பதிவாளரை அணுக வேண்டியிருந்தது. இந்நடைமுறையினை பொது மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் எளிமைப்படுத்திட ஏதுவாக பொது அதிகார ஆவணங்கள் தாங்கியுள்ள முத்திரைத் தீர்வை குறித்து சான்றளிக்கும் தீர்வு வழங்கும் அதிகாரம், சார்பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது **16.10.2014** முதல் அமலுக்கு வந்துள்ளது.

**7.6 இணைய வழி வில்லங்கச்சான்று விவரங்களை பெறுவதற்கு கட்டண விலக்கு மற்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் வழங்கப்படும் வில்லங்கச் சான்றுக்கான கட்டணச் சீரமைப்பு**

வில்லங்கச்சான்று கோரி பெருமளவில் விண்ணப்பங்கள் வரப்பெறுவதைக் கருத்தில் கொண்டு, வில்லங்கச்சான்று விவரங்களை இணையதளம் மூலமாகக் கட்டணமின்றி பார்வையிட்டு, அவற்றைப் பிரதி எடுத்துக்கொள்ளும் நடைமுறை **11.6.2014** முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறு இணையதளத்தில் வில்லங்க விவரங்களைப் பார்வையிடுவதற்குச்

செலுத்தப்பட வேண்டிய கட்டணத்திலிருந்து விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், வில்லங்கச்சான்றுகளில் பதிவு விடுபடுதல் ஏற்படுவதைத் தடுக்கும் முகமாக **10.12.2014** முதல் புல எண்ணை பொறுத்துத் தேடுதல் மேற்கொள்ளும் நடைமுறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான தேடுதல் கட்டணம், முதல் ஆண்டிற்கு ரூ.**30/–** எனவும், அடுத்த ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ.**10/–** எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 8. பதிவுத் துறையில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு

### 8.1 வலை சார்ந்த கணினிமயமாக்கல்

இணையவழி பரிமாற்றங்கள், இணையவழி பணம் செலுத்துகை, வருவாய் பதிவு விவரங்களை இணையவழி சரிபார்த்திடுதல், சான்றிட்ட நகல்களை இணையவழி அளித்திடுதல், மாநிலம் முழுமையிலும் சீரான மென்பொருள் மேம்பாடு போன்ற சிறப்பியல்புகளைக் கொண்டுள்ள வலை சார்ந்த மற்றும் நிறுவன வளத்திட்டமிடல் அடிப்படையிலான மையக் கட்டமைப்புமுறை அமைக்க கருதப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான மென்பொருள் தயாரிப்பு, வன்பொருள் வழங்கல், நிறுவிடுதல், வலை இணைப்பு, அயலாக்க பணியமைப்பு முறை மூலம் சார்பதிவகத்தின் சில சேவைகளை செயல்படுத்திடுதல், திட்டம் செயல்பாட்டிற்கு வந்ததிலிருந்து **5** ஆண்டு காலத்திற்கு வன் மற்றும்

மென்பொருள் பராமரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ.176.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருவாளர்கள் டாடா கன்சல்டன்சி நிறுவனத்தார் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட ஒப்பந்தப்புள்ளி வழியாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்நிறுவனத்தாரால் மென்பொருள் தயாரித்தல், வன்பொருள் வழங்குதல் மற்றும் திட்டம் செயல்பாட்டிற்கு வந்ததிலிருந்து 5 வருட பராமரிப்பு ஆகியவை மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக மென்பொருள் தயாரிப்பு, வன்பொருள் வழங்கும் பணி இந்நிறுவனத்தாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 8.2 இணைய வழியான புகைப்படக்கருவிகள் (IP camera)

சார்பதிவாளர் அலுவலகங்களின் செயல்பாட்டினை சம்மந்தப்பட்ட துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திலிருந்தும் மற்றும் சென்னையிலுள்ள பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திலிருந்தும் கண்காணிக்கும் பொருட்டு ஒவ்வொரு அலுவலகத்திலும் இரண்டு இணைய வழியிலான புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

## 8.3 வங்கிகள் மூலம் பணம் செலுத்திடும் முறை

பாதுகாப்பான மற்றும் எளிதான முறையில் வங்கிகள் மூலம் இணையவழி/ நேரடியாக பணம் செலுத்திடும் முறையை கருத்திற் கொண்டு, 2012-13–ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, துறையால் வசூலிக்கப்படும் கட்டணங்களை இணையவழி மற்றும் நேரடியாக செலுத்திடும்

திட்டத்திற்கென 11 வங்கிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான வன்பொருள் கொள்முதல், மென்பொருள் தயாரிப்பு மற்றும் பாதுகாப்பு தணிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான தொகையாக ரூ.28.20 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. இந்நடைமுறை ஜனவரி 2015 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையின் மூலம் 31.8.2015 வரையில், 1,96,614 இணையவழி பரிவர்த்தனைகள் செய்யப்பட்டு அதன் மூலம் ரூ.94,02,79,260/– மற்றும், 1,05,539 வங்கி முகப்பு வழியான நேரடியான (offline) பரிவர்த்தனைகள் செய்யப்பட்டு அதன் மூலம் ரூ.112,17,99,882/- வசூலிக்கப்பட்டுள்ளது.

## 8.4 எவ்வித கட்டணமுமின்றி வில்லங்கச் சான்று விவரங்களை துறை இணையதளத்தில் பார்வையிடும் வசதி

பொது மக்கள் ஒரு சொத்தினை வாங்குவதற்கான முதற்படியாக வில்லங்கச்சான்றினை பெறுவதற்கு பதிவு அலுவலகங்களுக்கு அதிகமாக வருகின்றனர். சொத்தின் மீதான வில்லங்கத்தினைத் தெரிந்து கொள்வதற்கும், வங்கிகளிலிருந்து கடன் பெறுதல் போன்ற நடவடிக்கைகளுக்கும் வில்லங்கச் சான்று பெறுவதற்கான கோரிக்கைகள் நாளுக்கு நாள் பன்மடங்கு பெருகிக்கொண்டு வருகின்றன. சார்பதிவாளர் அலுவலகத்தில் கூட்ட நெரிசலினைத் தவிர்த்திடவும், அலுவலகப் பணிகளை இலகுவாக்கவும், சொத்துரிமையாளர்களால் தங்களது சொத்து விவரத்தினை உலகின் எந்த இடத்திலிருந்தும் தெரிந்து

கொள்ள ஏதுவாகவும் துறையின் இணையதளத்திலிருந்து வில்லங்கச்சான்று விவரங்களைப் பொது மக்கள் அறிந்து கொள்ளும் வசதி **11.6.2014** முதல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. **31.8.2015** வரை **84,85,751** வில்லங்கச் சான்றுகள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டு இத்திட்டம் பெரும் வெற்றியடைந்துள்ளது.

## 8.5 இணையவழி முன்பதிவு முறை (e-visit)

பொதுமக்கள் நேரடியாக சார்பதிவகத்தினை தொடர்பு கொள்ளவும், நீண்ட நேர காத்திருப்பினை தவிர்த்திடவும் இணையவழி முன்பதிவு முறையில் (e-visit) ஆவணங்களைப் பதிவு செய்வதற்காக பதிவு அலுவலருடன் நேர ஒதுக்கீடு பெறுவதற்கான வலை அடிப்படையிலான திட்டம் **6.11.2013** முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 8.6 மின்னணு பதிப்பு முறை (e-stamping)

முத்திரைத் தீர்வையைச் செலுத்திட ஒரு மாற்று வழியாக **மின்னணு பதிப்பு முறை (e-stamping)** நமது மாநிலத்தில் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இம்முறை தற்போது சென்னை மண்டலத்திலுள்ள அனைத்துப் பதிவு அலுவலகங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மின்னணு பதிப்பு முறையானது முத்திரைச் சான்றளிப்பதாகும். இதனை விற்பனை, அடமானம் போன்ற எந்த ஒரு ஆவணத்திற்கும் முத்திரைத்தாளினைப்போல் பயன்படுத்திடலாம். இதில் கணினி மூலம் தோற்றுவிக்கப்பட்ட ஒரு பிரத்யேக எண் (unique number) இருக்கும். இந்தியன் வங்கி, கார்ப்பரேசன் வங்கி, சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா,

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பாங்க் ஆஃப் மகாராஷ்ட்ரா, பஞ்சாப் நேஷனல் வங்கி, ஓரியண்டல் பாங்க் ஆஃப் காமர்ஸ், அலகாபாத் வங்கி, தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி, சிட்டி வங்கி, யெஸ் வங்கி, பாங்க் ஆஃப் பரோடா, கனரா வங்கி, ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா ஆகியவை மின்னணு பதிப்பு முறையில் அங்கீகரிக்கப்பட்ட வசூல் மையங்களாக செயல்படுகின்றன.

மின்னணு முத்திரையிடும் முறையின் மூலம் ஈட்டப்பட்ட வருவாய் விவரம் பின்வருமாறு:—

| <u>வருடம்</u> | <u>மின்னணு முத்திரைச்சான்றுகள்</u> | <u>தொகை (ரூ. கோடியில்)</u> |
|---|---|---|
| 2011—12 | 6478 | 113.74 |
| 2012—13 | 11924 | 180.90 |
| 2013—14 | 32121 | 253.90 |
| 2014—15 | 67062 | 236.94 |

## 8.7 வலை நிழலி மற்றும் மின்னணு ரேகை பதிவு முறை செயல்படுத்திடுதல்

முறைகேடுகளைத் தவிர்க்கும் விதமாக, ஆவணங்களைப் பதிவு செய்யும் ஆவணதாரர்களின் புகைப்படங்கள் வலை நிழலி மூலமாகவும், அவர்களின் கைரேகைகள் மின்னணு ரேகைக் கருவி மூலமும் பதிவு செய்யப்படுகின்றன. இவ்வாறு பதிவு செய்யப்படும் நிழற்படங்கள் பதிவு செய்யப்படும் ஆவணத்தின் பகுதியாக ஒளிவருடல் செய்யப்பட்டு சேமித்து வைக்கப்படுகின்றன.

## 9. துறையின் உள்கட்டமைப்பு மேம்பாடு

### 9.1 கட்டடங்கள் கட்டுதல்

பதிவுத் துறையின் அனைத்து அலுவலகங்களும் 5 ஆண்டுகளுக்குள் சொந்த கட்டடங்களில் இயங்க வேண்டும் என்பது அரசின் இலக்காகும். இதனைச் செயல்படுத்தும் முகமாக 2011–2012ஆம் நிதியாண்டில் 52 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூபாய் 26 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டன. 2012–2013ம் நிதியாண்டில் 29 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 17 ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகங்கள் மற்றும் 48 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு தனித்தனியாக கட்டடங்கள் கட்ட ரூபாய் 48.90 கோடி ஒதுக்கப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 2013–2014ம் நிதியாண்டில் 11 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 4 ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகங்கள் மற்றும் 35 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூ.30 கோடி செலவில் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 2014–2015ஆம் நிதியாண்டில் 10 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 4 ஒருங்கிணைந்த வளாகங்கள் மற்றும் 25 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூ.21.62 கோடி செலவில் சொந்த கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 9.2 தீயணைப்பு கருவிகள்

பதிவுத்துறையில் பாதுகாப்பாக பேணப்படும் அனைத்து பதிவுருக்களும் நிரந்தரமான பதிவுருக்கள்

என்பதால் அவற்றை தீவிபத்திலிருந்து பாதுகாப்பது அவசியமாகும். எனவே பதிவுத்துறையில் உள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் ரூ. 4.78 கோடி செலவில் தீ தடுப்பு உபகரணங்கள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

## 10. 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம்

அரசு நிறுவனங்களின் செயல்பாட்டில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வரும் பொருட்டு, 2005ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, அரசிடமுள்ள தகவல்களை குறிப்பிட்ட கால வரையறைக்குள் அளிக்க வேண்டும். அரசின் பல்வேறு துறைகளுள், பொது மக்களுடன் அதிகத் தொடர்புடைய துறையான பதிவுத் துறை தனது செயல்பாடுகள் தெளிவான, எளிமையான மற்றும் வெளிப்படையான முறையில் இருப்பதை உறுதியாக்கியுள்ளது. இந்த நோக்குடன், 2005ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் அனைத்து மனுக்கள் மீதும் தனிக் கவனம் செலுத்தி, கோரப்பட்ட தகவல்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் அளிக்கப்படுகின்றது. இது துறையின் செயல்பாடுகளை வெளிப்படையாக்குவதுடன், அதனைச் செம்மைப்படுத்தவும் உதவுகின்றது.

பொது மக்களுக்கு விரைவான மற்றும் வெளிப்படையான சேவை வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள பதிவுத் துறை, தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைத் தனது செயல்பாடுகளில் உட்படுத்தி அக்குறிக்கோளை

எய்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

**எம்.சி.சம்பத்**
**வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்**